சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 36/2022

பெயர் திரு. ராஜகோபால் நாள். 17.04.2026
த/பெ.

**வாதிகள் தரப்பு சாட்சி 4 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் அகரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். வழக்கு சொத்து சிறுநகர் கிராமத்தில் உள்ளது. வழக்கு சொத்தின் புல எண் மற்றும் அளவுகள் தெரியாது. வழக்கு யார் யார் மீது தாக்கல் செய்துள்ளார் என்று ஞாபகம் இல்லை. வழக்கு சொத்து யாருக்கு உரிமையானது என்பதற்கான ஆவணங்களை நான் பார்த்தது இல்லை. வழக்கு சொத்தில் உள்ள கிணறு பற்றி எனக்குத் தெரியும். அது சுமார் 50, 60 வருடங்களுக்கு முன்பு எடுக்கப்பட்டது. அதை யார் யார் எடுத்தார்கள் என்றால் செஞ்சப்பன், சின்னன் ஆகியோர் எடுத்தார்கள். கிணற்றில் மின் மோட்டார் இல்லை. இன்ஜின் உள்ளது. 1ம் பிரதிவாதி கிணற்றின் கிழக்குக் கரையில் மோட்டார் அமைத்து நீர் இரைத்து வருகிறார் என்றால் எனக்குத் தெரியாது. கிணறு யார் யாருக்கு உரிமையானது என்பதற்கான ஆவணங்களை நான் பார்த்துள்ளேன். கிணறு புல எண் 150/6 ல் உள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நான் முதல் விசாரணையில் தவறான சங்கதிகளை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் அனுபவம் பற்றி எனக்குத்தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை